A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 72 / 2021</u>**

திரு.R.சுப்பையன்,
2/1171, கோவை மெயின் ரோடு,
பெட்டதாபுரம், காரமடை – 641 104.

………மேல்முறையீட்டாளர்
(திரு.R.சுப்பையன்)

எதிர்

1) செயற்பொறியாளர்/இ&பே/மேட்டுபாளையம்,
கோவை மின் பகிர்மான வட்டம் (வடக்கு),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிறுமுகை ரோடு, பவர் ஹவுஸ், மேட்டுபாளையம் – 641 301.

2) உதவி செயற்பொறியாளர்/இ&பே/காரமடை,
கோவை மின் பகிர்மான வட்டம் (வடக்கு),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
குந்தா காலணி, ரயில்வே நிலையம் ரோடு,
காரமடை – 641 104.

3) உதவி மின் பொறியாளர்/இ&பே/மேற்கு/காரமடை,
கோவை மின் பகிர்மான வட்டம் (வடக்கு),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
குந்தா காலணி, ரயில்வே நிலையம் ரோடு,
காரமடை – 641 104.

…… எதிர்மனுதாரர்கள்
(திரு. V. சண்முகசுந்தரம், செயற்பொறியாளர்/இ&பே/மேட்டுபாளையம்
திரு. கோஷ் முகமது செரிப், உதவி செயற்பொறியாளர்/இ&பே/காரமடை
திரு. மகாலிங்கம், உதவி மின் பொறியாளர்/இ&பே/மேற்கு/காரமடை)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 15-09-2021</u>**

**<u>கேட்புரை நாள்: 10-11-2021</u>**

**<u>ஆணை நாள்: 28-01-2022</u>**

15.09.2021 அன்று பெறப்பட்ட திரு.R.சுப்பையன், 2/1171, கோவை மெயின் ரோடு, பெட்டதாபுரம், காரமடை – 641 104 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 72/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 10.11.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனது விவசாய நிலத்தில் நடப்பட்டுள்ள மின் கம்பங்களை அப்புறப்படுத்துமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மின்வாரியத்தால் நடப்பட்ட மின்கம்பங்கள் தனது விவசாய பூமி முழுவதும் செல்லும்படி உள்ளதால் விவசாயத்திற்கும், பிற நிரந்திர தொழில்கள் தொடங்க இடையூறாக இருப்பதால் மின் கம்பங்களை அப்புறப்படுத்துமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மின் கம்பங்கள் அப்புறப்படுத்த ஆகும் செலவுத் தொகையினை மேல்முறையீட்டாளர் செலுத்தும் பட்சத்தில் மின்பாதைகள் மாற்றி அமைக்க ஆவண செய்யப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்ததால் மேல்முறையீட்டாளர் கோவை மின்பகிர்மான வட்டம்/வடக்கு, மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 19.02.2021 அன்று அணுகியுள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கோவை மின்பகிர்மான வட்டம்/வடக்கு 03.08.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **<u>மன்றத்தின் தீர்வு</u>:**

கோவை மின்பகிர்மான வட்டம்/வடக்கு, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 03.08.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**<u>மன்றத்தின் தீர்வு</u>**:*

*ஆகவே, திரு.R. சுப்பையன், காரமடை, கோவை அவர்களுக்கு எதிர்மனுதாரர்கள் சார்பாக, பொறி.V.சண்முகசுந்தரம், செயற்பொறியாளர்/ மேட்டுபாளையம் அவர்கள், எழுத்து பூர்வமாக பதில் அறிக்கை அளித்த விபரத்தில் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள 22KV சர்வால் மின்பாதை சுமார் 50 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டுள்ளது என்றும் மத்திய அரசின் உதய் திட்டத்தின் கீழ் மின்பாதையில் அமையப் பெற்றுள்ள தற்போதுள்ள கம்பிகளுக்கு பதிலாக அதைவிட மின் கடத்தும் திறன் அதிகளவுள்ள கம்பிகள் அமைக்க அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அனுமதி அளிக்கப்பட்டு புதிய கம்பிகள் மாற்றும் போது விவசாயம் செய்யவோ, சிறு தொழில்கள் செய்யவோ பாதிப்பு ஏதும் ஏற்படாத வண்ணம் அமைக்கப்பட வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என எதிர்மனுதாரருக்கு இம்மன்றத்தின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.*

*மேலும், மின்பாதையை மாற்றி அமைக்க மனுதாரர் விரும்பினால், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கல் விதி (Supply code) என்.5 ல் (6)(1) "மின்னிணைப்பு / மின் தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடம் மாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையான முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றப் பணி தொடங்கப்படும்" என உள்ளதால் வாரிய விதிகளின்படி விண்ணப்பம் பதிவு செய்து மதிப்பீட்டுத் தொகை செலுத்தும் பட்சத்தில் மின்கம்பங்கள் மாற்றியமைக்கப்படும் என இம்மன்றத்தால் தீர்வு வழங்கப்படுகிறது."*

4.0 **<u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 10.11.2021 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு.R.சுப்பையன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு. V. சண்முகசுந்தரம், செயற்பொறியாளர்/இ&பே/மேட்டுபாளையம், திரு. கோஷ் முகமது செரிப், உதவி செயற்பொறியாளர்/இ&பே/காரமடை மற்றும் திரு. மகாலிங்கம், உதவி மின் பொறியாளர்/இ&பே/மேற்கு/காரமடை, கோவை மின்பகிர்மான வட்டம்/வடக்கு ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 சுமார் 3 ஏக்கர் பெருமானமுள்ள கோவை மேட்டுப்பாளையம் NH-67 சாலையை ஒட்டி அமைந்துள்ள தனது விவசாய பூமியில், உயர்மின் அழுத்த பாதை (22KV) 40 guage மின் கம்பிகள் சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் தனது பூமியின் மையப்பகுதியில், தனது பூமியை இரண்டாகப் பிரிக்கும் படி முன்பக்கம் NH -67 மெயின் ரோட்டில் இருந்து கிழக்கில் சுமார் 100 மீட்டர் துரம் வரை தனது விவசாய பூமி முழுவதும் செல்லும்படி, விவசாயத்திற்கும் மற்றும் ஏனைய பிற நிரந்திர தொழில்கள் தொடங்கவும் மிகவும் இடையூறாக 3 மின் கம்பங்கள் கொண்டு மின்வாரியம் அமைத்து உள்ளதாகவும் இதனால் தனக்கு மின்பாதை ஒட்டி இருபுறமும் 15 அடி வீதம் 20 சென்ட் நிலம் நிரந்திரமாக உபயோகிக்க முடியாமல் கடந்த 50 வருடங்களாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 தற்போது மின் வாரிய அதிகாரிகள் அதே மின் பாதையை "உதய் திட்டத்தின் படி" விரிவுபடுத்த வேண்டி உள்ளதால் அதனினும் கூடுதல் மின் கடத்தும் திறன் கொண்ட 7/4.09 mm அளவுள்ள புதிய மின் கம்பிகளையும் மேலும் அவை கீழே தொங்கும் பட்சத்தில் ஏற்கனவே உள்ள 3 மின் கம்பங்கள் இடையே மேலும் 4 முதல் 6 புதிய மின் கம்பங்களை தனது பூமி முழுவதும் புதியதாக நிறுவ தன்னை அனுமதிக்கும் படி கேட்டுக்கொண்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 அவை ஏற்கனவே தங்கள் வாழ்வாதாரத்துக்கு மிகவும் இடையூறாகவும், பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஆகவும் உள்ளதாகவும், மற்றும் NH67 மெயின் ரோடு முன்புறம் தனது விவசாய பூமி அளவு சுமார் 120 அடி மட்டுமே ஆகும் எனவும், இதன் நடுவில் உயர் மின்பாதை செல்வதால் அதன் இருபுறமும் 20 அடி வீதம் 40 அடி தூரம் நிரந்திர கட்டிடம் கட்ட இயலாமல் பூமி விரையம் ஆகிறது எனவும், மேலும் அவற்றை தனது பெண் மக்கள் இருவருக்கும் சமமாக பிரிக்கையில் ஒருவர் பாகத்தில் முழுவதும் மின் பாதை மட்டுமே இருக்கும் என்பதாலும், இதனை கடந்த 16.12.2020 முதல் தனது தரப்பு நடைமுறையில் சந்தித்து வரும் இன்னல்களை மின்வாரிய அதிகாரிகளுக்கு தொடர்ந்து எடுத்துரைத்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் கடந்த 20.07.2021 அன்று மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் – கோவை அவர்கள், தனக்கு எதிராக அதே மின்பாதையில் புதிய மின் கம்பிகள் மற்றும் கூடுதல் மின் கம்பங்களை நிறுவ அனுமதிக்கும் படியும் அவை தனக்கு எந்தவித இடையூறும் இல்லாதவாறு அமைக்கப்படும் எனவும், மின் பாதை மாற்றி அமைக்க வேண்டுமெனில் அதற்கு ஆகும் தொகையை தன்னையே கட்ட வேண்டும் என உறுதி அளித்து தீர்வை இயற்றி வேண்டுமெனில் மேல்முறையீடு செய்து கொள்ளவும் என எனது தரப்பு நடைமுறை இன்னல்கள் பற்றி சிறிதும் ஆராயாமல், தனக்கு போதிய அவகாசமும் தரப்படாமல், மனிதாபிமானம் இன்றி இவ்வளவு காலமும் எந்த பிரதி பலனும் பாராமல் தொடர் இன்னல்களை சந்தித்து கொண்டும் மின் வாரிய உபயோகத்திற்கு மின் பாதை செல்ல அனுமதித்த தனக்கு அநீதியாகவும் அவசர கதியில் தீர்ப்பு இயற்றியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 இந்த தீர்வில் தனக்கு சற்றும் உடன்பாடு இல்லை எனவும், தற்போது உள்ள மின் பாதை மூலம் நடைமுறையில் தானும் தன் குடும்பமும் மிக அதிக இன்னல்களையும், வாழ்வாதார இழப்புகளையும், சரியாக பாகம் பிரித்து தர முடியாமலும் மன

உளைச்சலையும் சந்தித்து கொண்டு உள்ளதால் அவற்றை தனக்கும் தன் மக்கள் மற்றும் பின் சந்ததியர்கள் ஆகியோருக்கு தொடர் இடைஞ்சல் இல்லாமல் அதே மின்பாதையில் மேலும் அமைக்க சாத்தியமில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 எனவே தாங்கள் தயவு கூர்ந்து உரிய முறையில் தீர விசாரித்து தொடர் சிகிச்சையில் உள்ள தனக்கு மேலும் மேலும் கூடுதல் மன உளைச்சலையும், தொடர் அச்சுருத்தலையும் உண்டாக்காமல், உரிய கள ஆய்வு செய்து அந்த மின் பாதையை மேலும் தனது பூமியின் மையப்பகுதியிலேயே மீண்டும் அபிவிருத்தி செய்ய அனுமதிக்காமல், மின் வாரியமே "உதய் திட்டத்தின்" மூலம் தனது தோட்டத்தில் இருந்து அப்புறப்படுத்தி வேறு மாற்று மார்க்கமாக கொண்டு செல்ல ஆவண செய்யுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 புகார் மனுதாரர் திரு.சுப்பையன், 2/1171, கோவை மெயின்ரோடு பெட்டதாபுரம் காரமடை–641604 என்பவருக்கு சொந்தமான பெட்டதாபுரம் கோவை மெயின்ரோட்டின் கிழக்கே க.ச.எண்.825/834 பூமியில் 22 KV மின்பாதை சுமார் 50 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இம்மின்பாதையின் கடைசியில் உள்ள மின் இணைப்பிற்கும் தரமான மின்சாரம் வழங்க வேண்டி மத்திய அரசின் "உதய் திட்டத்தின்" கீழ் தற்போது உள்ள 7/3.35 mm கம்பிகளை அகற்றி உயர் கடத்துதிறன் கொண்ட 7/4.09 mm கம்பிகள் அமைக்க மதிப்பீடு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு தடிமனான கம்பிகள் அமைக்கப்படும்போது இரு கம்பங்களுக்கு இடையே உள்ள கம்பிகளின் தொய்வானது அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக இருக்கும் பட்சத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக புதியதாக கம்பங்கள் அமைக்க வேண்டியிருப்பதால் மனுதாரர் கூறியுள்ள நிலத்தில் நான்கு கம்பங்கள் மின் பாதைக்கு நேர் கீழே அமைக்கப்படும் எனவும், மின்பாதை நிறுவப்படும் பொழுது குடியிருப்பு வாசிகளுக்கோ தொழில் நிறுவனங்களுக்கோ விவசாய நிலங்களுக்கோ பாதிப்பு ஏற்படாத வகையில் நிறுவப்படுவதாகவும், தற்போது மக்கள் தொகை பெருக்கம், விவசாய நிலவிரிவாக்கம் மற்றும் தொழில் வளர்ச்சி போன்ற பல்வேறு காரணங்களுக்காக கட்டிடங்கள் கட்டுவதாலும், மின்பாதைகளுக்கு கீழே பயிர் செய்வதாலும் அம்மின்பாதைகள்

தற்போது மனுதாரருக்கு இடையூராக உள்ளதாக மனுதாரர் கருதுவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 எனவே நடைமுறையில் உள்ள வாரிய விதிகளின்படி மின்பாதையில் இடையூறு இல்லாமல் மாற்று வழியில் கொண்டு செல்ல ஏற்படும் செலவுத் தொகையினை பங்களிப்பு திட்டத்தின் கீழ் (Deposit Contribution Works) விண்ணப்பதாரர் செலுத்தும் பட்சத்தில் மின்பாதைகள் மாற்றி அமைக்க ஆவண செய்யப்படும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேல்முறையீட்டாளர் 19.02.2021 அன்று மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் மனு அளித்ததாகவும், கடந்த 20.07.2021 அன்று மேற்பார்வை பொறியாளர் வடக்கு வட்டம், கோவை அலுவலகத்தில் நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் மனுதாரர் பங்கேற்கவில்லை எனவும், மேலும் அவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால், காணொலி மூலம் கலந்துகொள்வதாக தெரிவிக்கப்பட்ட தகவல் மன்றத்திற்கு 23/7/2021 அன்று தாமதமாக பெறப்பட்டதினால் நடவடிக்கை எதுவும் எடுக்க இயலவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் கோவை மேட்டுப்பாளையம் NH 67 சாலையை ஒட்டி அமைந்துள்ள தனது 3 ஏக்கர் விவசாய பூமியின் மையப்பகுதியில் 22 KV மின் அழுத்த பாதை சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் அமைத்துள்ளதாகவும், விவசாயம் மற்றும் வேறு தொழில் தொடங்க இடையூறாக இருப்பதாகவும், தற்போது உதய் திட்டத்தின் கீழ் கூடுதல் மின் கடத்தும் திறன் கொண்ட மின்கம்பிகள் நிறுவ ஏற்பாடு செய்யப்படுவதாகவும், அவ்வாறு செய்யும்போது மேலும் கூடுதல் கம்பங்கள் தன்னுடைய நிலத்தில் அமைக்க முயற்சிப்பதாகவும் தெரிவித்துள்ளார். எனவே தற்போதுள்ள மின்கம்பங்கள் மற்றும் மின்பாதையை மாற்றியமைக்க கோரியதாகவும், அவ்வாறு மின்பாதையை மாற்றியமைக்க ஆகும் தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டுமென கோவை மின்பகிர்மான வட்டம், மின்குறைதீர் மன்றம் அளித்துள்ள தீர்வு தனக்கு ஏற்புடையதல்ல என்றும், வாரியமே "உதய் திட்டத்தின்" மூலம்

மின்கம்பங்களை தனது தோட்டத்தில் இருந்து அப்புறப்படுத்தி மாற்று வழியில் மின்பாதை அமைக்க கோரியுள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளர் திரு சுப்பையன் அவர்கள் பெட்டதாபுரம்-கோவை மெயின் ரோட்டின் கிழக்கே க.ச. எண் 825/834-இல் உள்ள தனக்கு சொந்தமான விவசாய நிலத்தில் 22KV மின்பாதை சுமார் 50 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது "உதய் திட்டத்தின்" கீழ் தற்போதுள்ள கம்பிகளை அகற்றி உயர் கடத்துதிறன் கொண்ட மின்கம்பிகள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு அமைக்கும்போது இருகம்பங்களுக்கிடையே உள்ள கம்பிகளின் தொய்வானது அதிகமாகும் பட்சத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக இடையிடையே மேலும் புதிய மின்கம்பங்கள் அமைக்க வேண்டியிருப்பதாகவும், அவ்வாறு அமைக்கும்போது நிறுவனங்களுக்கோ, விவசாய நிலங்களுக்கோ பாதிப்பு ஏற்படாத வகையில் நிறுவப்படுமென்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் தற்போது நடைமுறையில் உள்ள வாரிய விதிகளின்படி மின் பாதையை மாற்றியமைக்க ஏற்படும் செலவுத் தொகையினை பங்களிப்பு திட்டத்தின் கீழ் (Deposit Contribution Work) விண்ணப்பதாரர் செலுத்தும்பட்சத்தில் மின்பாதையினை மாற்றியமைக்கப்படும் என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 இவ்வழக்கு சம்பந்தமாக மின்கம்பம், மின்பாதை மற்றும் மின்மாற்றி போன்ற மின்தளவாடங்களை அமைக்கும் பணிகளை செய்வதற்கு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்குள்ள அதிகார விதிமுறைகளை ஆராய விரும்புகிறேன்.

7.5 மின்சார சட்டம் 2003, பிரிவு 164-இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885-இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அனுமதி வழங்கி தமிழ்நாடு அரசாங்கம் G.O.(Ms)No. 16 Energy (C3) Department, dated 23.02.2012-இல் ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, நான் இதுசம்பந்தமான விதிமுறைகளை அறிந்துகொள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885-ன் பிரிவு 10, 11, 16 மற்றும் 17 ஆகியவைகளை ஆராய விரும்புகிறேன். சட்டத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

***"Part III***

***Power to Place Telegraph Lines and Posts***

***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*

1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*

2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*

3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*

4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers.*

***11. Power to enter on property in order to repair or remove telegraph lines or posts***

*The telegraph authority may, at any time, for the purpose of examining, repairing, altering or removing any telegraph line or post, enter on the property under, over, along, across, in or upon which the line or post has been placed.*

*****

***Provisions applicable to other property***

***16. Exercise of powers conferred by section 10, and disputes as to compensation, in case of property other than that of a local authority***

*1. If the exercise of the powers mentioned in section 10 in respect of property referred to in clause (d) of that section is resisted or obstructed, the District Magistrate may, in his discretion, order that the telegraph authority shall be permitted to exercise them.*

*2. If, after the making of an order under sub section (1), any person resists the exercise of those powers, or, having control over the property, does not give all facilities for this being exercised, he shall be deemed to have committed an offence under section 188 of the Indian Penal Code (45 of 1860).*

*3. If any dispute arises concerning the sufficiency of the compensation to be paid under section 10, clause (d), it shall, on application for that purpose by either of the disputing parties to the District Judge within whose jurisdiction the property is situate, be determined by him.*

*4. If any dispute arises as to the persons entitled to receive compensation, or as to the proportions in which the persons interested are entitled to share in it, the telegraph authority may pay into the Court of the District Judge such amount as he deems sufficient or, where all the disputing parties have in writing admitted the amount tendered to be sufficient or the amount has been determined under sub-section (3), that amount; and the District Judge, after giving notice to the parties and hearing such of them as desire to be heard, shall determine the persons entitled to receive the compensation or, as the case may be, the proportions in which the persons interested are entitled to share in it.*

*5. Every determination of a dispute by a District Judge under sub-section (3) or sub-section (4) shall be final:*

*Provided that nothing in this sub-section shall affect the right of any person to recover by suit the whole or any part of any compensation paid by the telegraph authority, from the person who has received the same.*

***17. Removal or alteration of telegraph line or post on property other than that of a local authority***

*Provided that, if compensation has been paid under section 10, clause (d) he shall, when making the requisition, tender to the telegraph authority the amount requisite to defray the expense of the removal or alteration, or half of the amount paid as compensation, whichever may be the smallersum.*

*1. When, under the foregoing provisions of this Act, a telegraph line or post has been placed by the telegraph authority under, over, along, across, in or upon any property, not being property vested in or under the control or management of a local authority, and any person entitled to do so desires to deal with that property in such a manner as to render it necessary or convenient that the telegraph line or post should be removed to another part thereof or to a higher or lower level or altered in form, he may require the telegraph authority to remove or alter the line or post accordingly:*

*2. If the telegraph authority omits to comply with the requisition, the person making it may apply to the District Magistrate within whose jurisdiction the property is situated to order the removal or alteration.*

*3. A District Magistrate receiving an application under sub-section (2) may, in his discretion reject the same or make an order, absolutely or subject to conditions, for the removal of the telegraph line post to any other part of the property or to higher or lower level or for the alteration of its form; and the order so made shall be final. "*

7.6 மேற்கண்டுள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–ன் பிரிவு 10–ன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதே சமயம் பிரிவு 10(4) –ன்படி ஒரு நபருக்கு சொந்தமான நிலத்தில் மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ அமைக்கப்படவேண்டிய நேர்வில் இந்திய தொலைத்தொடர்பு சட்டத்தின்படி நிலவுடமையாளருக்கு முழு நஷ்டஈடு தரப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

7.7 இந்திய தொலைத்தொடர்பு சட்டம் பிரிவு 16–ன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதில் ஏற்படும் இடர்பாடுகளை களைவதற்கும் அல்லது அவ்வாறு அமைப்பதன் மூலம் நிலவுடைமையாளருக்கு தரப்பட வேண்டிய நஷ்டஈடு சம்பந்தமான தொகையில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் சம்பந்தப்பட்ட நிலம் அமையப்பெற்றுள்ள மாவட்ட நீதிபதிக்கு

அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பிரிவு 17–ன்படி அவ்வாறு அமைக்கப்பட்ட கம்பம் மற்றும் மின்பாதையை வேறு இடத்திற்கு மாற்றியமைக்க நிலவுடைமையாளர் விரும்பினால் அது சம்பந்தமாக மாவட்ட நீதிபதிக்கு மனு அளிக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த மனுவின்படி நடவடிக்கை எடுத்து நிலவுடைமையாளர் கோரும் நிவாரணத்தை அளிக்கக்கூடிய அதிகாரம் இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–ன்படி மாவட்ட நீதிபதிக்கே அளிக்கப்பட்டுள்ளது.

7.8 மேலும், மின் நுகர்வோர் குறைதீர்மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் உள்ள வழிகாட்டுதல்களின்படியும், மின்சார சட்டத்தின்படி வகுக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விதிமுறைகளின்படியும் தான் மின்குறைதீர் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளர் ஆகியோர் நுகர்வோரின் குறைகளுக்கு தீர்வு காண இயலும். எனவே, தற்பொழுதுள்ள தமிழ்நாடு மின்வழங்கல் விதி 5(6) ன்படி ஏற்கனவே அமைக்கப்பட்ட மின்பாதை மற்றும் மின்கம்பங்களை மாற்றியமைக்க உரிய DCW விண்ணப்பம் மற்றும் அதற்குரிய தொகை செலுத்தினால் மட்டுமே மேல்முறையீட்டாளரின் கோரிக்கை **எதிர்மனுதாரரால் பரிசீலித்து நடவடிக்கையெடுக்கப்படும் என தீர்வு செய்கிறேன்.**

**7.9 உதய் திட்டத்தின் கீழ் தற்போது உயர்கடத்து திறன் கொண்ட மின்கம்பிகள் மற்றும் கூடுதல் மின்கம்பங்கள் அமைத்த பிறகு மின்பாதை மாற்றியமைக்க ஆகும் செலவுத் தொகை தற்போதுள்ள நிலையில் மின்பாதையை மாற்றியமைக்க ஆகும் செலவுத் தொகையை விட அதிகமாகும் வாய்ப்புள்ளது. எனவே உரிமம்தாரர் உதய் திட்டத்தின் கீழ் வேலை தொடங்கும் முன்பு தற்போதே மின்பாதையை DCW திட்டத்தில் மாற்றியமைப்பது குறித்து மேல்முறையீட்டாளர் ஆலோசித்து முடிவு செய்யலாம். மேலும் தற்போதுள்ள நிலையில், சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மின்பாதை வேறு மூன்று நபர்களின் நிலத்தின் மீதும் செல்வதாக அறிய முடிகிறது. எனவே மின்பாதையை மாற்றி அமைக்கும் செலவுத் தொகையை நால்வரும் பகிர்ந்து கொள்ளலாம். எதிர்மனுதாரர் அனைத்து நில உரிமையாளர்களுக்கும் ஆலோசனை வழங்கி தகுந்த முடிவு எடுக்கலாமென ஆலோசனை தெரிவிக்கப்படுகிறது.**

**7.10 பத்தி 7.8–இல் உள்ள தீர்வின் படி மேல்முறையீட்டாளர் DCW திட்டத்தின் கீழ் மின்பாதையை மாற்றியமைக்க விரும்பாத பட்சத்தில் இந்திய தொலைதொடர்பு சட்டம் 1885–ன் பிரிவு 17–இன்படி மாவட்ட நீதிபதியை அணுகிட வழிவகை உள்ளது என்பதையும் தெரிவிக்கப்படுகிறது.**

7.11 மின் நுகர்வோரின் குறைகளுக்கு தீர்வு காண்பதற்காகத்தான் தமிழ்நாடு மின்சார

மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான விதிமுறைகள் 2004 வகுக்கப்பட்டுள்ளது. நவீன தகவல் தொடர்பு உள்ள இக்காலத்தில் சரியான தகவல் தொடர்பின்மை காரணமாக மின்குறைதீர்க்கும் மன்றத்தின் விசாரணையில் மேல்முறையீட்டாளர் கலந்து கொள்ள இயலாத பட்சத்தில் கால அவகாசம் கொடுத்து விசாரணையை வேறு ஒரு நாளுக்கு தள்ளி வைத்து மேல்முறையீட்டாளரின் குறைகளை கேட்டறிந்து தீர்வு கண்டிருக்கலாம்.

## 8.0 முடிவுரை:

8.1 பத்தி 7–இல் உள்ள தீர்வின்படி மின்பாதையை மாற்றியமைக்க உரிய DCW விண்ணப்பம் சமர்ப்பித்து அதற்குரிய தொகை செலுத்தினால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை எதிர்மனுதாரர் பரிசீலித்து நடவடிக்கையெடுக்குமாறு தீர்வு செய்கிறேன்.

8.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டாளரின் மனு எண் 72/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்:

1. திரு.R.சுப்பையன்,
2/1171, கோவை மெயின் ரோடு,
பெட்டதாபுரம், காரமடை – 641 104.

2. செயற்பொறியாளர்/இ&பே/மேட்டுபாளையம்,
கோவை மின் பகிர்மான வட்டம் (வடக்கு),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிறுமுகை ரோடு, பவர் ஹவுஸ், மேட்டுபாளையம் – 641 301.

3. உதவி செயற்பொறியாளர்/இ&பே/காரமடை,
கோவை மின் பகிர்மான வட்டம் (வடக்கு),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
குந்தா காலணி, ரயில்வே நிலையம் ரோடு,
காரமடை – 641 104.

4. உதவி மின் பொறியாளர்/இ&பே/மேற்கு/காரமடை,
கோவை மின் பகிர்மான வட்டம் (வடக்கு),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
குந்தா காலணி, ரயில்வே நிலையம் ரோடு,
காரமடை – 641 104.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
கோவை மின் பகிர்மான வட்டம் (வடக்கு),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத் (அஞ்சல்), கோயமுத்தூர் – 641 012.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.